International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# மதுரைக் காஞ்சியில் 'நிலையாமை'

**ஜெ. ப்ரீத்தா**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் க. இராதாகிருஷ்ணன்**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி
தருமபுரம் – மயிலாடுதுறை

**ஆய்வு சுருக்கம்**

பண்டைய தமிழகத்தில் பாண்டியர்களின் தலைநகராக விளங்கிய மதுரை மாநகரத்தில் பாண்டியர்களின் ஆட்சி திறம் மற்றும் திருமண பண்பாட்டு நெறிமுறைகளை நக்கீர பெருமான் இயற்றிய மதுரை காஞ்சி வழியே வி மற்றும் நிலைமை கருத்துகள் வெளிப்படுத்துவது கட்டுரையின் நோக்கம் ஆகும்.

***முதன்மைச் சொற்கள்:*** மதுரை மாநகர், நிலையாமை, பாண்டிய மன்னன் பாசறை அமைப்பு.

**முன்னுரை**

உலகில் தோன்றும் அனைத்துப் பொருள்களும் நிலையில்லாதவை ஆகும். நிலைபேறுடையது புகழ் மட்டும். இவ்வுயிர்கள் நல்வழியிலும் நிலையில்லா உடம்பை விட்டு வீடுபேற்றை அடையும். இக்கருத்தைச் சங்கப் புலவர்கள் காஞ்சித் திணையில் கூறுகிறார்கள். இக்கட்டுரை மதுரைக் காஞ்சியில் உள்ள நிலையாமையைப் பற்றி கூறுவதாகும்.

**இன்பமும் துன்பமும்**

இன்பம் ஒன்று இருந்தால் அதில் துன்பம் ஒன்று இருக்கும். அதைப் போல் பிறப்பு என்னும் போதே இறப்பும் உண்டு. அதைப்போல் உணர்வு இருந்த இடத்தில் பிரிவும் கலந்து இருக்கும். இவ்வாறு ஒருவருடைய வாழ்வில் இரவும் பகலும் போல மாறி மாறி வரும் இன்பமும், துன்பமும் என்பதை,

> **"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**
> **நன்பகல் அமையமும் இரவும் போல"**
>
> **"இன்னர் வெஞ்சொல் நன்னசை தர்ப்பத்**
> **துன்னலும் தகுமோ? துனிவு இல் நெஞ்ச"**

இவ்வாறு அகநானூற்றில் பாடல் வரி மூலம் அறியமுடிகிறது.

திருவள்ளுவர் துன்பங்கள் இயற்கைதான் என்று நினைப்பவன் எப்பொழுதும் பாதிக்கப்பட மாட்டான் என்பதை,

> **"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**
> **துன்பம் உறுதல் இலன்."**

இக்குறள் மூலம் வாழ்வில் வரும் இன்ப, துன்பங்களை விளக்கியுள்ளார்.

மாங்குடி மருதனார், இன்ப நிலையாக இருக்க வேண்டும். அதைப்போல் துன்பம் நீங்க வேண்டும் என்பதை,

**"கெட்டிசின் வாழி! கெடுகநின்
அவலம்!**

**கெடாஅ நல்இசை நிலைஇயர்,
நின் சேண்விளங்கு நல்லிசை!"**

என்னும் பாடல் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் புகழ்வது போல் உலகத்தில் உள்ள இன்ப துன்பங்களைப் பற்றிச் சுட்டிக் காட்டியுள்ளார். இதைப் போல் இவ்வுலகில் ஒருவர் மகிழ்வதும் மற்றொருவர் துக்கத்தில் இருப்பதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. உலகினைப் படைத்த இறைவன் மனிதனின் மாறுபட்ட இயல்பினை உணர்த்து கருத்தினை,

**"ஓரினெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்**

**இன்னா தம்மவிவ் வுலகம்
இனிய காண்கித னிமிர்புணர்ந் தோரே"**

இவ்வாறு புறப்பாடல்வழி பக்திஇலக்கியம் என்று நன்கணியார் கூறியுள்ளார்.

சங்கப் புலவர்கள் இன்பமும், துன்பமும் கலந்து நிற்கும் இந்த உலகில் பேரின்ப வாழ்விற்கு ஏற்றவாறு நல்ல செயல்களை அறிந்து செய்க! என்று அறிவுறுத்தியுள்ளனர்.

**நிலையாமை**

செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்று மூன்று வகைப்படும்.

நிலையாமை என்பது தோற்றமும் மறைவும் எப்பொழுதுமே நிகழக் கூடிய ஒன்றாகும். நிலையாமை உணர்வு அறிவாளர்களின் இடையே சிந்தனையாக இருந்து வந்தன. ஒருவனுடைய வாழ்நாளில் இளமை, செல்வம், யாக்கை இவை அனைத்தும் நிலையற்றவை ஆகும்.

மூப்பும் மரணமும் நேர்வது அனைவருக்கும் நிகழும் ஒன்று. சங்கப் புலவர்கள் இவற்றை யெல்லாம் சரியாக நம் பாடல்களின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு இவ்வழியில் இளமை, செல்வம், யாக்கை இம்மூன்றை நிலையில்லாதவையாக கூறி புகழ் ஒன்றை மட்டுமே நிலையானதாக கூறுகிறார். உலகின் நிலை இப்படி இருக்கும் பொழுது அதில் பிறந்த பொருள்களின் நிலையை பற்றி கூறல் வேண்டுமோ! அவை அனைத்தும் நிலையற்றவை ஆகும். ஆக ஒருவரின் ஆயுள் இவ்வளவு தான் என்று அறிந்தவர் எவரும் இல்லை. இக்கருத்து.

**"வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை"**

என்று 'நற்றிணை' பாடல் மூலமும்.

**"நாற்றம் சால்நளி பொய்கையிடை
முதிர்முகையிற்குக்
கூற்று ஊடிபோல் இறையிடூஉம்
வாழ்நாள்"**

என்ற கலித்தொகை பாவிலும் வாழ்க்கை நிலையற்றது என்பதைக் காண முடிகிறது. கண்ணுக்குத் தெரியாத காற்றைப் போல் கழியும் இந்த நிலையற்ற வாழ்வு நாம் காணும் கனவுப் போல் நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்து இந்த இளமை நீங்கி முதுமை வருவது அனைவருக்கும் நிகழ்கின்ற ஒன்று ஆகும்.

இதனை,

**"நாளும் கனவுக் கழிந்தனை யாவாகி, நனவின் இந்நிலை அறியாய்!"**

என்ற அகப்பாடலின் மூலம் அறிய முடிகிறது.

**செல்வம் நிலையாமை:**

நம் வாழ் நாளை வளமாக்கும் பொருள்கள் அனைவருக்கும் பிடித்தார் போல் கிடைப்பதும் இல்லை. கிடைத்தப் பொருள்கள் நிலையாக இருக்கப் போவதும் இல்லை. இந்நிலை மாறிக் கொண்டேதான் இருக்கும். மதுரைக்காஞ்சியில் செல்வ நிலைத்திற்த காரணம் எதுவாக இருந்தாலும்; அது இருவேறு வழியில் அழிப்பதைக் காட்டுகிறார். ஒன்று போர் மற்றொன்று பரத்தை உதவிச் சென்று சேரல். பாண்டியனின் நிலையைக் கூறும் இடத்து போரினால் பகைவரின் ஏவங்கள் கவர்ந்து செல்லும் நிலை ஏற்படும்.

**"உறுசெலுநர் புலம்புகு அவர்
கடிநாவின் நிலை தொலைச்சி**

**அசைந்த வருமா சேப்ப
ஊர் இருந்த வழிபாழ் ஆக"**

**என்ற பாடல் வழி அறியலாம்.**

**"கொழும் பசியழி தேம்பிக்
செழுங்கேளிர் நிகழல்சேர"**

என்ற வரிகளின் மூலம் போரின் அழிவால் வாழ்ந்த இடத்தை விட்டு குடிபெயர்ந்து சென்றனர் என்று கூறுகிறார். மாங்குடி மருதனார் பாண்டிய மன்னன் போரில் வெற்றி பெற்ற பிறகு அந்நாட்டின் உள்ள செல்வத்தைத் திரையாகப் பெற்றார் என்று பின்வரும் பாடலின் மூலம் கூறியுள்ளார்.

**"பணிநீதார் தேளம் தம்வழி நடப்ப,
பணியார் தேளம் பணிதந்து
நிறைகொண்மார்"**

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. இவை போர் நிகழ்வதால் ஏற்படும் கூடிய செல்வம் நிலையாமை எனலாம்.

சங்கத்தமிழர் செல்வம் நிலையில்லாதவை என்று உணர்ந்தும், அது ஒருவரிடம் இருந்து

மற்றொருவரிடம் செல்லக் கூடியவை என்றும் கூறுகிறார். பரத்தை வழிச்சேர்ந்தாலும் அச்செல்வம் நிலையற்றதாகும் என்பதை,

**"திறந்து மோந்தன்ன சிறந்து கமழ்நாற்றத்து,**
**கொண்டல் மலர்ப் புன்னிலைப் பூவேய்ந்து,**

**படிமீதார் வாழ்க்கைப் பறவை போல**
**கொடுங்குடிச் செல்வமும் பிறரும் மேய"**

இவ்வரி மூலம் செல்வம் நிலையற்றது என்பதை உணர முடிகிறது. பரத்தையர்களின் வாழ்வைக் கூறும் இளங்கோவடிகள்,

**"மாயப்பொய் பலகூட்டும்**
**மாயத்தாள்"** செல்வர்கள் அவர்களுடன் சேர்ந்து பிரிந்த நிலையைப் பற்றி பின்வருமாறு காண்போம்.

**"தன்பைந்தொடி வாடியமேனி வருத்தம் கண்டு யாவும்"**

**இலம்பாடு நாணுத்தரும் எனக்கு என்ன"** - என்றார். பொருட்செல்வம் எதுவாயினும் அச்செல்வத்தின் நிலையாமை தீயதாக மாறும் என்பதைக் கூறுகிறார். தலைவனை நீ பொருள் தேடிப் போவது பழைய வினைகளின் படியே மீண்டும் மீண்டும் நிகழ்கிறது என்பதனை,

**"கிழவர் இன்னோர் என்னாது**
**பொருள்தான்**
**படிவினை மருங்கின் பெயர்ப்பு உரையும்"**

என்ற கலித்தொகைப் பாடல் மூலம் காண முடிகிறது. இதனை வள்ளுவர்,

**"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று"**

என்ற குறள் மூலம் விளக்கியுள்ளார்.

**இளமை நிலையாமை**

இளமை என்பது ஆற்று நீர் போல் மிக வேகமாக மறைந்தாலும், ஒருநாள் குளத்து நீர் போல் குறைக்கப்படும். இவ்விளமையும், வாழ் நாளும், மூப்பும், மரணமும் நாம் காணும் கனவு போல் நிகழக் கூடியவை ஆகும்.

இதனை மதுரைக்காஞ்சியில்,

**"பொய்அரியா வாய்மொழியால்**

**பல்வெள்ளம் மீக்கூற**

**உலகம் ஆண்ட உயர்ந்தோர் மடிக"**

என்றும்,

**"பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்**

**கரைபொருது இரங்கும் கனை இரு முந்நீர்த்**

**மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!"**

என்று கூறி, இளமையின் முதல் உலகத்தில் உள்ள அனைத்து நிலையாமையினை மிகத் துல்லியமாக உணர முடிகிறது.

மரணம் என்பது அனைவருக்கும் வரக்கூடிய ஒன்றாகும். உலகத்தை ஆண்ட மன்னர்களும் மற்ற் உயிர்களும் நிலைத்து நிற்கக்கூடியது அல்ல என்பதை

**"விழுக்கடிப்பு அறைந்த முழுக்குரல் முரசம்**
**ஒழுக்குடை மருங்கின் ஒருமொழிந்து**
**ஆகு**
**நம்புகழ் நிறீஇச் சென்று**
**மாய்ந்தனரே!"**

என்று புறநானூற்று வரிமூலம் அறிய முடிகிறது.

**"இளமையும் காமமும் ஈன்பாணி**
**நில்லா"**

என்று கலித்தொகைப் பாடலின் வழி இளமை யானது நிலையாமை மதுரைக்காஞ்சியோடு ஒப்பிடலாம். திருவள்ளுவர் கூறுகிற,

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு"**

என்ற குறள் வழி வாழ்வானது நிலையற்றது என்பது தெரியமுடிகிறது. எனவே இளமை என்பது நிலையற்றது. இந்தக் காலத்தில் கல்வி, வாழ்வியல் நெறி முறைகள் அறம் நெய்தல், நீதி, கொடை மற்றும் பல்வேறு மனித வாழ்க்கை நிலைத்து இருக்கக் கூடிய வகையில் வாழ்வேண்டும்.

**யாக்கை நிலையாமை**

உலக வாழ்வை உற்றுநோக்கும் போது நிலையாமை தத்துவம் நிலைபெற்று விளங்கும். வாழ்நாளை ஒவ்வொரு நாளும் வாழ்நாளை பயனுள்ளதாக்க மாற்றிக் கொள்ள வேண்டும். துன்பங்கள் வரும்முன்பே நற்செயல்களை நாம் செய்ய வேண்டும். நற்செயல்களைச் செய்வதற்கு துறவு ஒன்றே சிறந்த நெறியென்று கூறுகிறார்கள். இறப்பிற்கு முன்னே இல்லறம் கொண்டு துறவறம் காண தொல்காப்பியர் கூறுவது:

**"காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**

என்கிறார்.

அனைவருக்கும் மரணம் என்பது வருவதுண்டு. அதனைச் செய்யும் எமன் கொஞ்சம் கூடத் தவறாமல் தனது கடமையைச் செய்து முடிப்பான். நமது இளமை சென்று மூப்பும் இறப்பும் வருவதற்கு முன்னே நல்லறம் செய்ய வேண்டும் என்பதனை,

**"இருங்கடல் உடுத்த இப்பெருங்கண் மாநிலம்**
**உடையிலை நடுவது இடைபிறர்க்கு இன்றித்**

**தாமே ஆண்ட ஏமங் காவலர்"**

**செய்ந்நீ முன்னியே நினையே**

**முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே"**

என்று புறநானூற்றில் நரிவெரூஉத்தலையார் விளக்கமாகக் கூறியுள்ளார்.

**"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான் எல்லாரும் உவப்பது அன்றியும் நல்லாற்றுப் படூஉ நெறியுமாஞ் ரதுவே"** என்ற புறநானூற்றில் நரிவெரூஉத்தலை யார் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**திருவள்ளுவர்**

**"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வா யெல்லாஞ் செயல்"** என்ற குறள் மூலம் விளக்கியுள்ளார்.

மதுரை கூடலூர் கிழார் முதுக்காஞ்சியில் மறுபிறப்பு என்பதன் சிந்தனையையும், நிலையாமையையும் எழுதியுள்ளார் என்பதை,

**"மறுபிறப்பு அறியா தகுபுப் பண்பு"**

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. மேலும் ஈயாதவனுக்குப் புகழ் இல்லை என்பதை,

**"சோராக்கையன் சொன்மலை யல்லன்"**

என்ற நான்காம் பாடல் வழி காணலாம்.

மதுரை காஞ்சியில் நிலையாமையைக் கூறும் நிலையாக

**"கொண்டொன்று கிளக்கலென், அடுபோர்**
**அண்ணல்!**
**கேட்டியிசின் வாழி! கெடுகநின் அவலம்!**
**கெடாது நிலையியர் நின் சேண் விளங்கு**
**நல்லிசை!"**

"காரெய்பொழுது இரவினும் கணையிரு முந்நீர்த் திரையிடு மணலினும் பலரே, உரைசெல மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!"

என்ற பாடல் மூலம் நிலையாமையை வற்புறுத்தியும், வீடுபேற்றினை உணர்த்தியும் உள்ளார். மாங்குடி மருதனார் மதுரை காஞ்சியில்

"மகிழ்ந்து இனிது உறைமதி, பெரும! வரைந்து நீ பெற்றநல் ஊழியையே!"

வாழ்க்கையின் காலம் கணிக்க முடியாதது, உலகம் ஆண்டுமறைந்தோரால் அதைக் கூறுகிறது. ஆக, வாழும் நாள் வரை நல்லறம் செய்து மகிழ்வுடன் இருப்பதே நலம் என்பதை

"பொய் அறியா வாய்மொழியால் புகழ் நிறைந்த நன்மாந்தரொடு நல்ஊழி அடிப்படர, பல்வெள்ளம் மீக்கூற உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!"

என்ற பாடல் மூலம் நன்னெறி கூறியுள்ளார்.

இந்த உயிர் நிலைத்து இருக்கக் கூடியது ஆகும். ஆனால், நாம் செய்கின்ற வினைகள் மூலம் இறைவனின் திருவடி சேரும். எனவே செல்வம், இளமை, யாக்கை இவை மூன்றும் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும் தவிர அழிந்து போய் விடாது. உலகம் எப்படி சுற்றுகிறதோ அதைப்போல் நிலையாமை யும் இந்த பூமியைச் சுற்றி வரும். மனித வாழ்க்கையில் செல்வம் ஒருவனிடம் இருந்து மற்றவரிடம் செல்லும். ஒருவனுக்கு மூப்பு வந்தால் இன்னொருவனுக்கு இளமை வரும். இதைப் போல் தான் உயிரும் மாறிப் பிறக்கும். எனவே, மனிதனின் புகழும் செயலும் நிலைத்திருக்க வேண்டுமானால் அவன் நல்ல அறம், நீதி, கொடை ஆகியவை செய்ய வேண்டும்.

**சான்றொன் விளக்கம்**


1. அகம்.பா.எ. 327, பா.வரி 1-4
2. திரு - அதி. 63, கு.எ. 629, பா. 129
3. மது. காஞ்சி - 208 – 209
4. நற்றிணை. பா. எ. 314. பா. வரி. 1
5. கலி. பா. எ. 17 பா. வரி - 11-12
6. அகம். பா. எ. 353 பா. வரி - 2-6
7. மது. 152-158
8. மது. 167-168
9. மது - 229 – 230
10. மது - 567 – 571
11. சிலம்பு, கானல்வரி, 52-3
12. சிலம்பு - கனாத்திறம் உரைத்த காதை - பா.வரி-68-71
13. கலி.பா.ச.21, பா.வ.10-11
14. திரு. அதி. 344, குறள். 332
15. மது - 19-23
16. மது, 234-237
17. புறம்., பா.எ: 366, பா.வரி: 1-5
18. கலி., பா.எ: 12, பா.வ: 14
19. திரு. அதி: 34, கு.எ: 336
20. தொல் : பொருள் , கற்பு , நூற்பா 51
21. புறம் . பா . எ : 363
22. புறம். பா. எ: 195, பா. வரி. 6-9
23. திருக்குறள், அதி: 4, கு. எ. 32
24. முதுமொழி, அல்லபத்து, பா. எ: 10
25. முதுமொழி, அல்லபத்து, பா. எ: 4
26. ம.கா : 207 - 209
27. ம.கா : 235 - 237
28. மதுரைக்கா : 781 - 782
29. ம.கா : 19 - 23